பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை

15 07 2025 **TUESDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

தலைப்புச் செய்திகள்

1. சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருந்து வெற்றிகரமாக பூமிக்கு திரும்பியுள்ள விண்வெளி வீரர் சுபான்ஷு சுக்லாவுக்கு, குடியரசுத் தலைவர், பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.
2. விண்வெளி, செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இந்தியா மிகப்பெரிய வளர்ச்சியை எட்டியுள்ளதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.
3. தீவிரவாதத்திற்கு எதிராக ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு சமரசமற்ற நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என்று வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.
4. எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி இந்திய மீனவர்கள் 34 பேரை பங்களாதேஷ் கடற்படை கைது செய்துள்ளது.
5. ஏமனில் இந்திய செவிலியர் நிமிஷா பிரியாவுக்கு நாளை நிறைவேற்றப்படவிருந்த மரண தண்டனை நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

இனி விரிவான செய்திகள்-

<<<<<>>>>>

சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருந்து வெற்றிகரமாக பூமிக்கு திரும்பியுள்ள விண்வெளி வீரர் சுபான்ஷு சுக்லாவுக்கு, குடியரசுத் தலைவர், பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், இந்த விண்வெளிப்பயணத்தின் குருப் கேப்டன் சுபான்ஷு சுக்லாவின் பங்கு மிக முக்கியமானது என்று குறிப்பிட்டுள்ளார்.

இது இந்தியாவின் விண்வெளி ஆய்வுக்கும், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறையில் சர்வதேச ஒத்துழைப்புக்கும் முக்கிய மைல்கல்லாக அமைந்துள்ளது என்று திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், சுபான்ஷு சுக்லாவின் விண்வெளிப்பயணம், ககன்யான் திட்டத்திற்கான முக்கிய மைல்கல்லாக அமைந்துள்ளது என்று கூறியுள்ளார்.

சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருந்து வெற்றிகரமாக திரும்பியுள்ள சுபான்ஷு சுக்லாவுக்கு அவர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

சுபான்ஷு சுக்லா தமது விடா முயற்சி மற்றும் அர்ப்பணிப்பின்மூலம் நாட்டு மக்களின் கனவுகளை நனவாக்கியுள்ளதாக திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய விண்வெளித்துறை இணையமைச்சர் திரு ஜிதேந்திர சிங், இந்திய விண்வெளித்துறைக்கு இது ஒரு முக்கிய தருணம் என்று குறிப்பிட்டார்.

பூமிக்கு திரும்பியுள்ள விண்வெளி வீரர்கள் ஒருவாரம் மருத்துவ கண்காணிப்பில் வைக்கப்படுவார்கள் என்று அவர் தெரிவித்தார்.

அதன்பின்னர் அவர்கள் சொந்த நாடுகளுக்கு திரும்புவார்கள் என்றும் அமைச்சர் கூறினார்.

சுபான்ஷு சுக்லா ஆகஸ்ட் 17-ஆம் தேதி தாயகம் திரும்புவார் என்று எதிர்பார்க்கப்படுவதாக திரு ஜிதேந்திர சிங் கூறினார்.

<<<<<>>>>>

விண்வெளி, செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இந்தியா மிகப்பெரிய வளர்ச்சியை எட்டியுள்ளதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

ஒடிஷாவின், கட்டாக்கில் உள்ள ராவென்ஷா பல்கலைக்கழகத்தில் இன்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் பங்கேற்று பேசிய அவர், 2047-ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த நாடாக இந்தியா மாற கல்வித்துறையின் பங்களிப்பு முக்கியமானது என்று கூறினார்.

குறிப்பாக, பெண் கல்வி ஊக்குவிக்கப்பட வேண்டியது அவசியம் என அவர் தெரிவித்தார்.

தாய்மொழி வழியிலான கல்வி திறன்களை மேம்படுத்த உதவும் என்று அவர் கூறினார்.

தேசமே முதன்மையானது என்ற குறிக்கோளுடன் இளையோர் செயல்பட வேண்டும் என்று அவர் அறிவுறுத்தினார்.

மாணவர்கள் தாய்மொழி வளர்ச்சிக்கு செயலாற்றுவதுடன், பல்வேறு மொழிகளை கற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறினார்.

அதனைத்தொடர்ந்து, ஒடியா கவிஞர் அடிகபி சரலாதாஸின் 600-ஆவது பிறந்த ஆண்டு விழாவிலும் குடியரசுத் தலைவர் பங்கேற்றார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், இந்திய மொழிகளை ஊக்குவிக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்தார்.

இந்நிகழ்ச்சியின்போது கலிங்கா ரத்னா விருதை மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதானுக்கு, திருமதி திரௌபதி முர்மு வழங்கினார்.

<<<<<>>>>>>

தீவிரவாதத்திற்கு எதிராக ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு சமரசமற்ற நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என்று வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.

சீனாவின் **'Tianjin'**-ல் இன்று நடைபெற்ற அந்த அமைப்பின் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் பேசிய அவர், பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு காரணமானவர்கள் தண்டிக்கப்பட வேண்டியது அவசியம் என்றார்.

இந்த தாக்குதல் ஜம்மு காஷ்மீரின் சுற்றுலா பொருளாதாரத்தை சீர்குலைக்கும் நோக்கிலும், பிரிவினையை ஏற்படுத்தும் நோக்கிலும் நடத்தப்பட்டதாக அவர் கூறினார்.

தீவிரவாதத்திற்கு நிதியுதவி அளிப்பவர்கள் மற்றும் அதை மறைமுகமாக ஆதரிப்பவர்கள் என அனைவரும் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் என்று டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்தார்.

<<<<<>>>>>>

ஏமனில் இந்திய செவிலியர் நிமிஷா பிரியாவுக்கு நாளை நிறைவேற்றப்படவிருந்த மரண தண்டனை நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

நிமிஷா பிரியாவை மீட்க மத்திய அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சுமூக தீர்வை ஏற்படுத்த எதிர்தரப்பினருடன் தொடர்ந்து பேச்சு நடத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர்கள் கூறியுள்ளனர்.

ஏமனில் உள்ள சிறைத்துறை அதிகாரிகளுடன் இந்திய அதிகாரிகள் தொடர்ந்து தொடர்பில் இருந்து வருவதாகவும், இந்தியா மேற்கொண்ட முயற்சிகள் காரணமாகவே மரண தண்டனை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

எல்லைத் தாண்டி மீன்பிடித்ததாக கூறி, இந்திய மீனவர்கள் 34 பேரை பங்களாதேஷ் கடற்படை கைது செய்துள்ளது.

மேற்குவங்கத்தின் 24 பர்கானாஸ் மாவட்டத்தை சேர்ந்த மீனவர்கள் இன்று காலை கடலில் மீன்பிடித்துக்கொண்டிருந்தபோது கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் பங்களாதேஷின் மோங்லா துறைமுகத்திற்கு அழைத்து செல்லப்பட்டுள்ளனர்.

அவர்களது படகுகளையும் பங்களாதேஷ் கடற்படை பறிமுதல் செய்துள்ளது.

கைது செய்யப்பட்ட மீனவர்களை மீட்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மேற்குவங்க மாநில அரசு வெளியுறவு அமைச்சகத்தை கேட்டுக்கொண்டுள்ளது.

<<<<<>>>>>>

மத்திய அரசின் நலத்திட்டங்கள் தொடர்பாக, சென்னை மண்டல பத்திரிகை தகவல் அலுவலகத்தின் சார்பில் ஊடகவியலாளர்களுக்கான ஒருநாள் பயிலரங்கம் தமிழகத்தின் கிருஷ்ணகிரியில் இன்று நடைபெற்றது.

இதில் கலந்துகொண்ட பத்திரிகை தகவல் அலுவலகத்தின் தென் மண்டல தலைமை இயக்குனர் திரு வி. பழனிசாமி, தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் செயல்பாடுகள் குறித்தும், மத்திய அரசின் நலத்திட்டங்கள் குறித்தும் விளக்கினார்.

ஊடகங்கள் அரசின் நலத்திட்டங்கள் குறித்த செய்திகளை அதிக அளவில் வெளியிட வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

மத்திய அரசின் நிதித்துறை திட்டங்கள் மற்றும் வங்கி சேவைகள் தொடர்பாக இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் சேலம் மண்டல மூத்த மேலாளர் திரு விக்ரம் சேத் எடுத்துரைத்தார்.

அடல் ஓய்வூதியத்திட்டம், முத்ரா கடன் திட்டம் போன்றவை குறித்து இந்தியன் வங்கியின் தருமபுரி மண்டல மேலாளர் திரு கோவிந்தராஜு விளக்கினார்.

வேளாண் பொருட்களின் ஏற்றுமதியை ஊக்குவிக்க மத்திய அரசின் வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப்பொருட்கள் ஏற்றுமதி ஆணையம் செயல்படுத்தும் திட்டங்கள் குறித்து அந்த ஆணையத்தின் மண்டல பொது மேலாளர் திருமதி ஷோபனா குமார் எடுத்துரைத்தார்.

<<<<<>>>>>>

தமிழகத்தின் சேலம் மாவட்டத்தில் பிரதமரின் தொழில் பழகுநர் பயிற்சித் திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்ட வருகிறது.

இத்திட்டம் தொழிற்பயிற்சி நிலைய மாணவர்களுக்கு சிறந்த அனுபவத்தை வழங்குவதாக மாவட்ட திறன் பயிற்சித்துறை உதவி இயக்குனர் திரு ராஜன் எமது செய்தியாளரிடம் கூறினார்.

இத்திட்டம் தங்களுக்கு பெரிதும் பயன் அளிக்கும் என்று இதற்கான முகாமில் பங்கேற்ற மாணவிகள் தெரிவித்தனர்.

<<<<<>>>>>>

ராஜஸ்தான், ஜம்மு காஷ்மீர் ஆகிய பகுதிகளுக்கு உட்பட்ட சில இடங்களில் அடுத்த 24 மணிநேரத்தில் மிக கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

பீகார், ஜார்கண்ட், ஒடிஷா ஆகிய மாநிலங்களுக்கு உட்பட்ட ஒரு சில இடங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, தமிழகத்தில் அடுத்த சில நாட்களுக்கு சில மாவட்டங்களில் கனமழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வுமைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் எமது செய்தியாளரிடம் கூறினார்.

<<<<<>>>>>>

<u>விளையாட்டுச் செய்தி</u>

ஆசிய அலைச்சறுக்கு சாம்பியன் போட்டி ஆகஸ்ட் மாதம் 3-ஆம் தேதி முதல், 12-ஆம் தேதிவரை தமிழகத்தின் மாமல்லபுரத்தில் நடைபெறவுள்ளதாக மாநில துணை முதலமைச்சரும், விளையாட்டுத்துறை அமைச்சருமான திரு உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இப்போட்டித் தொடர்பான இதழை இன்று வெளியிட்டு பேசிய அவர், இப்போட்டியில், 20 நாடுகளைச் சேர்ந்த 150 வீரர்கள் பங்கேற்க உள்ளதாக தெரிவித்தார்.

இப்போட்டியை நடத்த தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் 3 கோடியே 3 லட்சம் ரூபாயை ஒதுக்கியிருப்பதாக திரு உதயநிதி ஸ்டாலின் கூறினார்.

<<<<<END>>>>>